**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாய் இல்லாத சீவன்களுக்காக உதவுகிற மந்தைப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்குகளை, அவைகளுக்காகப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசினுடைய கடமையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அர்ச்சுனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டு இருக்கிற இந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 30, 40 ஆண்டுகளாக வீடுகளைக் கட்டி குடி இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே மின்சார இணைப்புகள் பெற்று, பவர்லூம் கூட போடப்பட்டு இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி இப்போது கால்நடைகளே இல்லாத பகுதியாக, தொழில் நிறைந்த பகுதியாக, பவர்லூம் ஃபேக்டரிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட அந்தப் பகுதியில் தற்போது பட்டா கொடுப்பதற்கான பிராசஸ் நடந்து, ஃபைல் இங்கே அரசுக்கு வந்து இருக்கிறது. எனவே, அதைப் பரிசீலித்து விரைவில் பட்டா கொடுப்பதற்கு-தகுதி படைத்தவர்களுக்கு இலவசமாகவும், தகுதியற்ற வசதி படைத்தவர்களுக்கு அதற்குண்டான கட்டணத்தை சலுகை முறையிலே வழங்கி, பட்டா கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து, பல்லாண்டுகளாக அங்கே ஆக்கிரமித்து இருக்கிறார்கள்; அதுவும் வசதிவாய்ப்பு உள்ளவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள்; பவர்லூம் போட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மாடு இல்லை என்றால், மாட்டையே அவர்கள் ஆக்கிரமித்து மாட்டை அகற்றி விட்டார்கள் போல் தெரிகிறது. இருந்தாலும், இப்போது இருக்கிற நிலைமையை ஆராய்ந்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 224, திரு. வி.பி. சந்திரசேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

*1994 ஏப்ரல் 8]*

*224–*

## பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்

***20100– திரு. வி.பி. சந்திரசேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி.பி. சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆமாம் என்று பதில் வருகிற கேள்வியைத் தான் நான் எப்போதும் கேட்பேன். இருந்தாலும் கூட இதற்கு இல்லையென்று பதில் வந்து விட்டது. பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையானது மூன்று தொகுதிகளுக்கு உள்ள ஒரே மருத்துவமனை. இது கிட்டத்தட்ட 118 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கிறது. இங்கே கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஆயிரம் நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே உள் நோயாளிகள் கிட்டத்தட்ட 200 பேர் எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இருக்கிற படுக்கைகள் 118, இருப்பவர்களோ 200 பேர்கள். ஆகவே, இந்த அரசு மருத்துவமனைக்கு புதியதாக மேலும் கட்டிடம் கட்டிக் கொடுத்து அரசு உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்த கணக்குப்படி சராசரியாக ஒரு நாளைக்கு 122 பேர் உள் நோயாளிகளாக இருக்கிறார்கள். ஆனால் அந்த மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் தேவை என்ற நிலை இருக்குமானால் அதைப்பற்றி ஆய்வு செய்து எதிர்காலத்தில் நிதிநிலைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வி.பி. சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருக்கிற கட்டிடம் மேல் மாடி கட்டுவதற்கு வசதி உடையதாக கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதியும் கூட அதிகம் தேவையில்லை.

ஆகவே, குறைந்த நிதியை வைத்துக் கூட இந்தக் கட்டிடத்தைக் கட்டலாம். ஆகவே, இதனுடைய பயன் கருதி அமைச்சர் அவர்கள் புதிய கட்டிடம் கட்ட ஆணை இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சேர்ப்பதற்கு நிச்சயமாக வாய்ப்பு இல்லை. காரணம் ஏற்கெனவே டிமாண்ட் எல்லாம் முடிந்திருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டிலேதான் இதைப்பற்றி யோசிக்க முடியும். மேல் மாடி கட்டுவதற்குக் கூட குறைவாகச் செலவாகும் என்றாலும் குறைந்த நிதிக்கே கூட நமக்கு இப்போது பணத்தை ஒதுக்க முடியாத நிலை இருக்கிறது என்ற காரணத்தினால்தான் அதைக் குறிப்பிட்டேன். எனவே, அதுபற்றி எதிர்காலத்தில் ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 225, திரு. ஓ.எஸ். அமர்நாத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

*225--*

**மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி அமைத்தல்**

**23393- திரு. ஓ.எஸ். அமர்நாத்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

மதுரை மாநகரில் பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஓ.எஸ். அமர்நாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லா முக்கியமான நகரங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு இணையாக மருத்துவக் கல்லூரியில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. தமிழகத்திலே உள்ள அனைத்து மக்களும் பல் மருத்துவப் படிப்பு படிக்க சென்னையில்தான் வந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மதுரை வாழ் மக்களுக்கு பல் மருத்துவப் படிப்பிலே முக்கியத்துவம் கொடுக்கிற வகையிலே-இங்கே சென்னையில் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வடுகன்குளம் போன்ற இடங்களில் தனியார் பல் மருத்துவக் கல்லூரிகள்